இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 10-05-2025

# தீவிரவாதத்தை முழுமையாக வேரறுக்க...

ஜம்மு காஷ்மீர் மாநிலம், பஹல்காம் மாவட்டம், பைசரன் பள்ளத்தாக்கில் பயங்கர தீவிரவாதிகள் ஏப்ரல் 22 ஆம் தேதி நடத்திய தாக்குதலில் 26 உயிர்கள் கொல்லப்பட்டன. இருபதுக்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தார்கள். இந்த இரக்கமற்ற கொடூரமான பயங்கரவாதச் செயலைச் செய்தவர்கள் மீது கடுமையான தாக்குதலை இந்திய ராணுவம் தொடுத்துள்ளது.

பஹல்காம் தாக்குதலுக்குப் பிறகு முதல் முறையாக கடந்த ஏப்ரல் 24 பொதுமக்கள் மத்தியில் பேசிய பிரதமர் நரேந்திர மோதி, “இந்தத் தாக்குதலுக்குக் காரணமான தீவிரவாதிகள், கற்பனை செய்ய முடியாத அளவுக்கு மோசமான தண்டனையைப் பெறுவார்கள்” என்றார்.

தீவிரவாதிகளின் கொடூரமான தாக்குதல், ஜம்மு காஷ்மீரில் சுற்றுலாப் பயணிகள் மீது நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலை நடத்திய தீவிரவாதிகளுக்குப் பின்னணியில் பாகிஸ்தான் இருக்கும் என்று இந்தியா கருதுகிறது. இந்தத் தாக்குதலுக்கு பாகிஸ்தான் மீது குற்றம்சாட்டிய இந்தியா, இரு நாடுகளுக்கும் இடையிலான சிந்து நதிநீர் உடன்படிக்கையை இடைநிறுத்தி வைத்ததுடன், அட்டாரி-வாகா எல்லையை மூடியது. இரு நாட்டுத் தூதரகங்களில் பணியாற்றிய அதிகாரிகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது. இந்தியாவில் இருக்கும் பாகிஸ்தான் குடிமக்கள் 48 மணி நேரத்திற்குள் நாட்டை விட்டு வெளியேறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

பாகிஸ்தான் விமானங்களுக்கு இந்தியா தனது வான்வெளியை மூடியது. பாகிஸ்தானிலிருந்து அனைத்து விதமான இறக்குமதிகளையும் இந்தியா தடை செய்தது. அதேபோல பாகிஸ்தானும், இந்தியாவுக்குச் சொந்தமான அல்லது இந்தியாவால் செயல்படுத்தப்படும் எல்லா விமானங்களுக்கும் தன் வான்வெளியில் அனுமதி மறுத்தது. சீக்கிய யாத்ரீகர்களைத் தவிர அனைத்து இந்தியர்களுக்கும் SAARC விசா தள்ளுபடி திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட விசாக்களை நிறுத்தி வைத்த பாகிஸ்தான், அவை ரத்து செய்யப்பட்டதாகக் கருதப்பட வேண்டும் என்றது. இதைத் தொடர்ந்து இந்திய - பாகிஸ்தான் எல்லை பதற்றத்துக்குரிய பகுதியாக மாறியது.

“பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலுக்கு பதிலடி தருவது தொடர்பான முடிவுகளை மேற்கொள்ள பாதுகாப்புப் படையினருக்கு முழு சுதந்திரம் உள்ளது. தாக்குதல் இலக்குகள், நேரம், தாக்குதல் நடத்தும் முறை குறித்து பாதுகாப்புப் படையினரே முடிவுகள் எடுக்கலாம்” என்று பிரதமர் மோடி அறிவித்தார். இது போன்ற நடவடிக்கைகள் இருக்கும் என்பதை பாகிஸ்தான் எதிர்பார்க்கவில்லை. ஆனாலும் அந்த நாடு தனது தவறை உணர்ந்ததாகத் தெரியவில்லை.

கடந்த 7 ஆம் தேதியன்று ‘ஆபரேஷன் சிந்தூர்’ என்ற பெயரில் மிகப்பெரிய தாக்குதலை இந்திய ராணுவம் தொடுத்தது. பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாதிகளின் முகாம்களை அழிக்க இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலில் 100 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாக பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார். பயங்கரவாத அமைப்பு ஒன்றின் தலைவரான மசூத் அசாரின் குடும்பத்தைச் சேர்ந்த பத்துப் பேரும் கொல்லப்பட்டுள்ளார்கள்.

இதைத் தொடர்ந்து இந்திய எல்லைக்குள் பாகிஸ்தான் தாக்குதல் நடத்தியது. இந்தியாவில் உள்ள 15 நகரங்களைக் குறி வைத்தது பாகிஸ்தான். ஏவுகணைகள், டிரோன்களை அனுப்பியது. இதனை இந்திய ராணுவம் வானில் முறியடித்தது. இதைத் தொடர்ந்து பாகிஸ்தானை நோக்கி, இந்தியா தனது தாக்குதலை நடத்தியது. லாகூர் வான்பாதுகாப்பு அமைப்பு சிதைக்கப்பட்டது. பாகிஸ்தானின் 4 விமானங்களை இந்தியா வீழ்த்தி உள்ளது. போர் தொடர்ந்து வருகிறது. இந்த போர்ச் சூழல் எப்போது நிற்கும் என்பதை இப்போது கணிக்க இயலாது.

**இந்திய ராணுவத்தின் இந்த நடவடிக்கைகள், தீவிரவாதத்தை முழுமையாக வேரறுக்கும் வகையில் அமைய வேண்டும். பஹல்காம் பகுதியில் பாதுகாப்புக் குறைபாடுகள் இருந்ததை மறைக்க இவை நடத்தப்பட்டு விடக் கூடாது. மக்கள் மத்தியில் தங்களது செல்வாக்கை உயர்த்துவதற்காக இது போன்ற செயல்களைச் செய்யக் கூடாது.**

2016 ஆம் ஆண்டும் இதே போன்ற தாக்குதல் நடைபெற்றது. இந்திய ராணுவ வீரர்கள் மீது ஜம்மு காஷ்மீர் உரியில் தாக்குதல் நடத்தப்பட்டது. அப்போதும் பாகிஸ்தானுக்குள் புகுந்து இந்தியா தாக்குதல் நடத்தியது. 2019 ஆம் ஆண்டும் இதே போன்ற தாக்குதல் நடந்துள்ளது. மத்திய ரிசர்வ் காவல் படை மீது புல்வாமா தாக்குதல் நடத்தப்பட்டதற்கு பதிலடியாக பாகிஸ்தானின் பாலகோட்டில் பயங்கரவாத முகாம்கள் மீது போர் விமானங்கள் மூலமாக இந்தியா தாக்குதல் நடத்தியது. இவை எல்லாம் தீவிரவாதத்துக்கு, பயங்கரவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கவில்லை. பத்து நாள் பதற்றமாகவே முடிந்துவிட்டது. ஆனால் தீவிரவாதிகள் நிரந்தரப் பதற்றத்தை தக்கவைத்தே வருகிறார்கள்.

**“இந்தியாவுக்கு எதிராக தாக்குதலை நடத்துவதற்காக கடந்த 30 ஆண்டுகளாக பயங்கரவாதக் குழுக்களுக்கு பயிற்சியும் நிதி உதவியும் பாகிஸ்தான் அரசு அளித்து வருகிறது” என்று பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் கவாஜா ஆசீப் பேட்டி அளித்துள்ளார். இதனை தாங்கள் செய்வதற்கு உலகின் எந்த நாடுகள் எல்லாம் தங்களுக்கு உதவி செய்தது என்றும் அவர் சொல்லி இருக்கிறார். இதனை ஒன்றிய அரசு எப்படி எதிர்கொள்ளப் போகிறது?**

**தீவிரவாதத்தை வளர்ப்பதில் பாகிஸ்தான் ஆதரவு என்பது ஒருகூறு மட்டுமே. இன்னும் அதற்கு பல்வேறு முகங்கள் இருக்கின்றன.**

**எனவே, தீவிரவாதத்தை முழுமையாக வேரறுக்கத் தேவையானதை ஒன்றிய அரசு செய்ய வேண்டும். இவ்வளவு பதற்றமான சூழலில் அனைத்துக் கட்சிக் கூட்டம் நேற்றைய தினம் நடந்துள்ளது. அந்தக் கூட்டத்தில் பிரதமர் மோடி பங்கேற்கவில்லை. இதற்கு முன்பு நடந்த கூட்டத்திலும் அவர் பங்கேற்கவில்லை. அரசின் நடவடிக்கைகளுக்கு அனைத்துக் கட்சிகளும் ஆதரவு தெரிவித்துள்ள நிலையில், போர் பெருமையைத் தனிச் சொந்தம் கொண்டாட நினைக்காமல் தீவிரவாதத்துக்கு முழுமையாக முற்றுப்புள்ளி வைப்பதில் காட்டவும்.**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.5.2025) திருச்சிராப்பள்ளி மாநகர், பஞ்சப்பூரில் நடைபெற்ற அரசு விழாவில், முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையத்தில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார். இந்நிகழ்வின்போது, நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மேயர் மு. அன்பழகன், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், நகராட்சி நிருவாக இயக்குநர் எஸ். சிவராசு, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் மா. பிரதீப் குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

## திருச்சி – பஞ்சப்பூரில் ரூ.773.30 கோடியில் பெரியார் ஒருங்கிணைந்த காய்கறி அங்காடிக்கு அடிக்கல் நாட்டல், பேரறிஞர் அண்ணா கனரக சரக்கு முனையம் மற்றும்

# முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**திருச்சி, மே 10 -**

**திருச்சிராப்பள்ளி மாநகர், பஞ்சப்பூரில் ரூ.773.30 கோடி மதிப்பீட்டில் பெரியார் ஒருங்கிணைந்த காய்கறி அங்காடிக்கு அடிக்கல் நாட்டி, பேரறிஞர் அண்ணா கனரக சரக்கு முனையம் மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையம் ஆகியவற்றை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.5.2025) திருச்சிராப்பள்ளி மாநகர், பஞ்சப்பூரில் நடைபெற்ற அரசு விழாவில், 236 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள பெரியார் ஒருங்கிணைந்த காய்கறி அங்காடிக்கு அடிக்கல் நாட்டி, 128.94 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா கனரக சரக்கு வாகன முனையம் மற்றும் 408.36 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையம் ஆகியவற்றை திறந்து வைத்தார்.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசால், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் குடிநீர்த் திட்டங்கள், நகர்ப்புர வளர்ச்சித் திட்டங்கள், மின்வசதி, சாலை வசதி, பாலங்கள், பள்ளிகள், கல்லூரிகள், வேளாண் வளர்ச்சித் திட்டங்கள், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்குகின்ற வகையில் சிப்காட், டைடல் பூங்கா உள்ளிட்ட பல்வேறு தொழில் நிறுவனங்கள் உருவாக்கம், மக்களின் நலனுக்கான புதிய மருத்துவ கட்டமைப்புகள் என பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு திருச்சிராப்பள்ளி மாவட்டம் தமிழகத்தில் முதன்மை மாவட்டமாகத் திகழ்ந்து வருகிறது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு மேலும் பயன்தரும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நேற்று பெரியார் ஒருங்கிணைந்த காய்கறி அங்காடி கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டு, புதிதாகக் கட்டப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா கனரக சரக்கு வாகன முனையம் மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையம் ஆகியவை மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டன. அப்பணிகள் குறித்த விவரங்கள்:

**பெரியார் ஒருங்கிணைந்த காய்கறி அங்காடிக்கு அடிக்கல் நாட்டுதல்**

திருச்சிராப்பள்ளி, பஞ்சப்பூரில் 22 ஏக்கர் பரப்பளவில் 236 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெரியார் ஒருங்கிணைந்த காய்கறி அங்காடி கட்டுவதற்கு முதலமைச்சர் அவர்கள் நேற்று அடிக்கல் நாட்டினார். பின்னர், அங்கு அமைக்கப்பட்டுள்ள தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்து, அச்சிலையின் அருகில் அலங்கரித்து வைக்கப்பட்ட அன்னாரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

இந்த சந்தை தரைத்தளத்தில் 872 கடைகள், தானியங்கள் விற்பனைக்கென 149 கடைகள், திறந்தவெளியில் 850 தரைக் கடைகள், ஏலம் நடத்துவதற்கென 37,200 சதுர அடியில் மேற்கூரையுடன் கூடிய திறந்தவெளி அரங்கம், உணவகக் கட்டடம், 186 ஒப்பனை அறைகள், மாற்றுத்திறனாளிகளுக்கான தனி ஒப்பனை அறைகள், 110 கனரக சரக்கு வாகனங்கள் மற்றும் 698 இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடங்கள் அமைக்கப்படவுள்ளன.

**பேரறிஞர் அண்ணா கனரக சரக்கு வாகன முனையத்தை திறந்து வைத்தல்**

திருச்சிராப்பள்ளியில் காந்தி சந்தை, கீழரண் சாலை உள்ளிட்ட பகுதிகளில் நிற்கும் சரக்கு வாகனங்களால், போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதைத் தவிர்க்கும் விதமாக, திருச்சிராப்பள்ளி பஞ்சப்பூரில் 38.10 ஏக்கர் பரப்பளவில் 246 கனரக வாகனங்கள் நிறுத்தும் வகையில் 30.12.2021 அன்று கனரக சரக்கு வாகன முனையத்திற்கு முதலமைச்சர் அவர்களால் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் அடிக்கல் நாட்டப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, 128.94 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா கனரக சரக்கு வாகன முனையத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். பின்னர், அங்கு அமைக்கப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்து, அச்சிலையின் அருகில் அலங்கரித்து வைக்கப்பட்ட அன்னாரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

பேரறிஞர் அண்ணா கனரக சரக்கு வாகன முனையத்தில் கனரக வாகனங்களை இயக்குபவர்களுக்கென 51 கடைகள் (Booking Office), 28 அலுவலக பணிக்கான கடைகள், 107 கண்காணிப்பு கேமராக்கள், 2 எல்.இ.டி. அறிவிப்புப் பலகைகள், வாகனங்களுக்கான மின்னணு கட்டண வசதி, 102 இருசக்கர வாகனங்கள் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம், 4816 சதுர அடியில் 120 இருக்கைகள் கொண்ட உணவகம், 46 ஒப்பனை அறைகள், மாற்றுத்திறனாளிகளுக்கான தனி ஒப்பனை அறைகள் மற்றும் பசுமை அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

மேலும், கனரக வாகன ஓட்டுநர்களுக்கென தரைத்தளம் மற்றும் முதல் தளத்தில் 208 படுக்கைகள் மற்றும் அனைத்து வசதிகளுடன் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. அத்துடன் கூடுதலாக 29 ஒப்பனை அறைகள் கொண்ட சுகாதார வளாகமும் கட்டப்பட்டுள்ளது. இப்பகுதியில் 87 தனியார் ஆம்னி பேருந்துகள் வந்து செல்லும் வகையில் பேருந்துகள் நிறுத்துமிடமும் அமையவுள்ளது.

**முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையத்தை திறந்து வைத்தல்**

திருச்சிராப்பள்ளி மாநகரில் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்திடும் வகையிலும், அனைத்துப் பகுதிகளுக்கும் மக்கள் எளிதாகச் சென்று வரும் வகையிலும். திருச்சிராப்பள்ளி, பஞ்சப்பூரில் தமிழ்நாட்டின் மிகச்சிறந்த பேருந்து முனையம் அமைத்திட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 30.12.2021 அன்று திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற அரசு விழாவில் அடிக்கல் நாட்டப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, 162 .18 கோடியில் பன்நோக்கு வணிக வளாகம் மற்றும் 246.18 கோடி ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த பேருந்து முனையம் என மொத்தம் 408.36 கோடி மதிப்பில் சிறந்த தொழில்நுட்ப வழிகாட்டுதலின்படி, மக்கள் பயன்பாட்டிற்குத் தேவையான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் தமிழ்நாட்டின் தனிச் சிறப்பு மிக்க பேருந்து முனையமாக அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையத்தை நேற்று முதலமைச்சர் அவர்கள் மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். பின்னர், அங்கு அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்து, அச்சிலையின் அருகில் அலங்கரித்து வைக்கப்பட்ட அன்னாரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

தமிழ்நாட்டில் பன்னாட்டு விமான நிலையத்திற்கு நிகராக அனைத்து நவீன வசதிகளையும் கொண்ட மிகப் பெரிய பேருந்து முனையமாக 38 ஏக்கர் பரப்பளவில் தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. இதில் தரைத்தளத்தில் 124 பேருந்துகள், நீண்ட நேர நிறுத்த பேருந்துகள் 141, குறைந்த நேர நிறுத்த பேருந்துகள் 80 என 345 வெளியூர் பேருந்துகளும், முதல் தளத்தில் 56 உள்ளூர் நகரப் பேருந்துகளும், என மொத்தம் 401 பேருந்துகள் ஒரே சமயத்தில் நிறுத்துவதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், 78 கடைகள் மற்றும் 4 உணவகங்கள், 6 மின் தூக்கிகள், 6 இயங்கும் படிக்கட்டுகள் (Escalators), 49 எல்.இ.டி. அறிவிப்புப் பலகைகள், 11 நபர்கள் அமர்ந்து செல்லும் பேட்டரி கார்கள், 166 கண்காணிப்பு கேமராக்கள், ஏடிஎம் மையங்கள், பயணச்சீட்டு முன்பதிவு மையம், பொருட்கள் பாதுகாப்பு அறை, பயணியர் ஓய்வறை, குழந்தைகளுக்கு பாலூட்டும் அறை, நேரக் காப்பாளர் அறை, 50 மீட்டருக்கு ஒன்று வீதம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் அமைப்புகள், ஜெனரேட்டர் வசதி, புத்தகக் கடைகள் மற்றும் இலவச செல்போன் சார்ஜர் மையங்கள், 135 சிறுநீர் கழிப்பிடம், 104 கழிப்பிடங்கள், மாற்றுத்திறனாளிகளுக்கான கழிப்பிடங்கள் 4, குளியலறை 4 என 284 ஒப்பனை அறைகள், மாற்றுத்திறனாளிகளுக்கான தனி ஒப்பனை அறைகள், 100 ஆட்டோக்கள் நிறுத்துமிடம், 1923 இரு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம், 212 கார்கள் நிறுத்துமிடம் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

இப்பேருந்து முனையத்தில், பேருந்து ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்கள் தங்கி ஓய்வெடுப்பதற்காக தரைத்தளம் மற்றும் முதல் தளத்தில் 208 படுக்கை வசதி மற்றும் அனைத்து வசதிகளுடன் ஒரு தனி தங்கும் விடுதியும், வாகனங்கள் நிறுத்துமிட வசதிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

பயணிகளின் வசதிக்காக பேருந்து முனையத்தின் தரைதளம் முற்றிலும் குளிரூட்டும் வசதியுடன் அமைக்கப்பட்டுள்ளது. காற்றுமாசினை கட்டுப்படுத்தி குளிர்ந்த சூழலை ஏற்படுத்தும் வகையில், பேருந்து முனையத்தைச் சுற்றிலும் பசுமை அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டு மக்களின் உயர்வுக்கும் சமூக நீதிக்கும் அரும்பாடுபட்ட முப்பெரும் தலைவர்களான தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் பெயரால் அமைந்திடும் காய்கறி அங்காடி, கனரக சரக்கு வாகன முனையம் மற்றும் ஒருங்கிணைந்த பேருந்து முனையம் ஆகியவை மக்களின் முன்னேற்றத்திற்கும், மாவட்டத்தின் வளர்ச்சிக்கும் வித்திடும் பெரும் திட்டங்களாகும்.

இவ்விழாவில், அமைச்சர்கள் கே.என்.நேரு, எஸ்.இரகுபதி, எஸ்.எஸ்.சிவசங்கர், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சிவ.வீ.மெய்யநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், நகராட்சி நிருவாக இயக்குநர் எஸ்.சிவராசு, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப் குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களில்

# புதிய கல்விக் கொள்கையை அமல்படுத்தக்கோரி வழக்கு!

## உச்ச நீதிமன்றம் தள்ளுபடி!

*புதுடெல்லி, மே 10 -*

தமிழ்நாட்டில் புதிய கல்விக் கொள்கையை அமல்படுத்தக் கோரி தொடர்ந்த மனுவை, உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது. தேசிய கல்விக் கொள்கையை ஏற்கும்படி எந்த மாநிலத்தையும் கட்டாயப்படுத்த முடியாது என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் புதிய கல்விக் கொள்கையை அமல்படுத்தக் கோரி பா.ஜ.க. வழக்கறிஞர் ஜி.எஸ். மணி உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். இந்த வழக்கு நீதிபதிகள் பார்திவாலா, மகாதேவன் ஆகியோர் அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது, உச்சநீதிமன்றம், புதிய கல்வி கொள்கையை அமல்படுத்துங்கள் என்று மாநில அரசுக்கு உத்தரவு பிறப்பிக்க முடியாது என்று தெரிவித்தது. மேலும், ஒரு விவகாரம் அரசியல் சாசனத்துக்கு முரணாக உள்ளது என்றால் நீதிமன்றம் விசாரணை நடத்தும் என்றும், இந்த விவகாரம் அடிப்படை உரிமையை மீறுவதாக இல்லை என்று கருத்து தெரிவித்து மனுவை தள்ளுபடி செய்து உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

அரசியலமைப்பின் 32வது பிரிவின் கீழ் எந்த ஒரு மாநிலத்தையும் தேசிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொள்ள கட்டாயப்படுத்த நீதிமன்றம் எந்த உத்தரவையும் பிறப்பிக்க முடியாது என்று நீதிபதிகள் கூறினர்.

மேலும், தேசிய கல்விக் கொள்கை போன்ற ஒரு கொள்கையை ஏற்றுக் கொள்ள ஒரு மாநிலத்தை நேரடியாக கட்டாயப் படுத்த முடியாது என்று உச்சநீதிமன்றம் தெரிவித்தது.